மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.

அசல் வழக்கு எண். 73/2013

நாள் 05.09.2023.

பெயர்.கிருஷ்ணமூர்த்தி த/பெ. பெருமாள் கவுண்டர்

வா.சா.1. சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

1. வழக்கு சொத்தில் நெல் உலர் களம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நெல் உலர் களம் கட்டுவதற்கு பணம் யார் கொடுத்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நெல் உலர் களம் மேற்கு ஆரணி வட்டாரவளர்ச்சி அலுவலகத்தின் மூலமாக பணம் கொடுக்கப்பட்டு கட்டப்பட்டது என்றால் சரிதான்.

2. வழக்கு சொத்தில் நெல் உலர் களம் கட்டுவதற்கு நான் ஆட்சேபணை ஏதேனும் செய்தேனா என்றால் அதை கட்டிய துணை தலைவர் கணேசன் எனது பங்காளி முறை அண்ணன் ஆவார் அவர் என்னிடம் ஒரு ஓரமாக நெல் உலர் களன் கட்டிக்கொள்கிறேன் என்று கூறினார் நானும் அண்ணன் என்பதால் ஆட்சேணை எதுவும் தெரிவிக்கவில்லை.

3. நான் எழுத்து மூலமாக நெல் உலர் களம் கட்டுவதற்கு அனுமதி அளித்தேனா என்றால் இல்லை. மேற்படி நெல் உலர் களம் பொது மக்கள் அனைவரும் உபயோகித்து வருகிறார்கள் என்றால் அனைவரும் உபயோகித்து வருகிறார்கள் அதில் நான் தான் அதிகமான உபயோகித்து வருகிறேன். மேற்படி நெல் உலர் களம் அரசாங்கதிற்கு உரிமையானது என்றால் சரிதான் ஆனால் அதை என் அண்ணன் தான் கட்டினார்.

4. நான் மேற்கு ஆரணி வட்டாரவளர்ச்சி அலுவலரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் ஒரு அம்மன் கோவில் இருக்கிறதா என்றால் 2014-2015ம் ஆண்டு வாக்கில் என் பெரியப்பா கண்ணன் கட்டினார். மேற்படி கோவிலை பொது மக்கள் பணத்திலிருந்தும் என் பெரியப்பா கண்ணன் பணத்திலிருந்தும் கட்டினார்.

5. மேற்படி கோவில் கட்டுவதற்கு நான் ஆட்சேபணை ஏதேனும் செய்தேனா என்றால் என் பெரியப்பா நெல் உலர் களன் உள்ள இடத்தில் கோவில் கட்டிடுக்கொள்வதாக என்னிடம் கேட்டார் நானும் ஒப்புக்கொண்டேன். கோவிலானது நெல் உலர் களம் தாண்டி கிழக்கு பக்கம் இருக்கிறது என்றால் சரியல்ல நெல் உலர் களம் இடத்திற்கு உள்ளே தான் இருக்கிறது. நெல் உலர் களம் சிமெண்ட், மணல், ஜல்லி ஆகியவற்றால் கட்டப்பட்டது என்றால் சரிதான்.

P. Krishnamoorthy

6. நெல் உலர் களம் அதன் நீளம், அகலம் தெரியுமா என்றால் தெரியாது. நெல் உலர் களத்தில் கோவில் கட்டிவிட்டால் மேற்படி களம் பயன்படுத்த முடியாது என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் சாட்சியிடம் புகைபடத்தை காண்பித்து நான் கூறும் கோவில் இது என்று கேள்வி எழுப்பினார் அதற்கு சாட்சி புகைபடத்தை பார்த்து என்னால் கூற முடியாது நேரடியாக வாருங்கள் என்றும் இதை நம்ப முடியாது என்று சாட்சி சாட்சியம் அளிக்கிறார்.

7. இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டரா என்றால் பார்வையிட்டார்.

Taken Down before by me in open court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

25.09.23

District Munsif
Arni.